*Editor's Note*

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM


# THE MORNING STAR


*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QB/59/300/26/82*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 142 JAFFNA, FRIDAY, 19th NOVEMBER, 1982 No. 47

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE



*Subscription*

Inland: Rs. 35/- per year. Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*

**The Manager,**
'Morning Star', Vaddukoddai.


## Third National Jamboree

The Third National Scout Jamboree is scheduled for February 1983 in Anuradhapura. Mrs. Siva Obeysekara is Chairman of the Fund raising campaign. A Return Ticket to Singapore and a colour TV are among the prizes offered for winners of the competitions organised in connection with the Jamboree.

This national Jamboree is being conducted after a period of 20 years. The Bank of Ceylon and the Hatton National Bank have come foreward to give significant support.

## Views on the Referendum

*UNP's first Referendum meeting* was held at Kochichikade on 17-11-82 in the evening. President J. R. Jeyawardene opening the compaign gave three reasons to the people gathered there, why the government had opted for a referendum. One reson was to farestall the rancour generated by election encounters.

Another reason was his need for legislative backing to carry the development program through. The third reason was that 52.9 million voters had provided him the extension mandate on October 20.

The President said that the Referendum was only a devise to canvass public opinion and nobody could say the move was wrong.

The idea of a Referendum was not new. U. K., France, Switzerland had all resorted to the exercise. It adhered to democratic principles through popular consultation.

*The Executive Committee of the Student Christian Movement of Sri Lanka* has sent an Appeal in Sinhala and English dated 6-11-82 to all Christian Associations and Human Rights Movements in which it has stated that the proposal of the UNP to hold a Referendum on the continuity of the present parliament will result in a suspension of the Democratic process.

The dangerous implications of this proposed action, says the Appeal have already been analysed and pointed out in public statements made by the Civil Rights Movement, the Centre for Society and Religion and the Satyodaya Centre.

The history of Rerenendums in other countries, the Appeal points out, should be a reminder to us that such referendums eventually lead to dictatorship of either the civil or military kind.

The *Appeal* concludes by a quotation from Dietrich Bonbrefer:—

"We are not Christ. But if we want to be Christians, we must have some share in Christ's large heartedness by acting with responsibility and in freedom when the hour of danger comes and by showing a real sympathy that springs not from fear but from the liberation and redeeming love of Christ for all who suffer."

*At Rest*

### Mr. C. S. Ponnuthurai

We regret to record the death which occurred in Colombo on 12-11-82 of Mr. C. S. Ponnuthurai (73) a former teacher at Jaffna College Vaddukoddai and later at Wesley College, Colombo.

Mr. Ponnuthurai had his early education at Trinity College, Kandy during the Mcleod Cambell era. He entered the Government Training College in Colombo early in his career and on completing his training was for a while on the staff of the Anglican school at Pussellawa.

He joined the staff of Jaffna College in 1930 together with his friend and long time colleague Mr. E. J. J. Niles (Jeevar) — the first two Ceylonese teachers appointed by Rev. John Bicknell to the tutorial staff of Jaffna College.

Mr. Ponuuthurai's long association with Jaffna College (for well nigh two decades) enriched not merely the College but also the Teachers' world both in the peninsula as well as outside.

He was closely assoeiated in his teaching career with the activities of the ACUT, the NPTA, the Christian Teachers Guild, the Jaffna Inter Collegiate Christian Fellowship, the Student Christian Movement etc., all of which organisations had at one time or another the benefit of his wise counsel and organisational skill.

He was a king-pin in the organisation of many and all Ceylon SCM camp where the brunt of the entire burden fell on his shoulders.

He was among the pioneers who introduced and organised the JSC (NPTA) Examination in the North, which for many years set the standard in Education at a crucial stage in a students school career. Mr. Ponnuthurai was the Secretary (if we are correct) of the first NPTA Examination Council way back in the mid forties.

Mr. Ponnuthurai belonged to an early batch of English trained teachers, whose versatility left a rich legacy to the instituitions they served.

Jaffna College had three such *assistant* Trained Teachers who left a rich impact on the tone of the college during their teaching career at Vaddukaddai:— Mr. C. R. Wordsworth, Mr. E. J. J. Niles and Mr. C. S. Ponnuthurai.

JAFFNA COLLEGE

## CHRISTMAS VESPER SERVICE

**"O COME LET US ADORE HIM"**

BY

THE JAFFNA COLLEGE CHOIR

on

Sunday 5th December, 1982 at 6.00 p. m.

at

the Cathedral Church, Vaddukoddai.

You and your friends are eordially invited.

Jaffna College,
Vaddukoddai.

**A. Kadirgamar,**
Principal.

*Church News from Abroad*

**North American Churches** in big citiies have found a new way of raising funds. They are selling their air space. Regulations on building heights often allow a builder to put up a taller office block if someone nearby has only a low building — and can guarantee it will stay that low.

So there is a healthy market for the churches wanting to sell rights to the air space above their buildings. It has guaranteed the future of some parishes even though their witness will have to maintain a low profile.

**New Editor for "*One World*"**

*Mr. Marlin Van Elderen* (36) will be the new Editor of *One World* from the beginning of next year. He is a member of the Christian Reformed Church and has been Chief Editor of *Reformed Journal* for the last four years. He was also interim Publications Editor at WCC Geneva office from 1980 — 1981.

He succeeds Bruce Best who is returning to his home country of Australia for family reasons.

## A Memorable Musical Event

An event that must not go unrewarded took place on October 9th College day at Christian Medical College Vellore and came as a climax to the days celebrations. namely the opera 'Evita' staged by the Students Association. Produced by Ernest Jehangir and the music Directed by Shanthini Navaratnam with a team of 95 students. It was an ambitious attempt which more than fulfilled expectations and became a high water mark in the musical achievement of C. M. C.

The astounding fact was that the entire music had been worked out from the Casette of Evita without the Musical Score. The scenes were 23 depicting different stages in the life of Eva Peron from cafe dancer/singer to Presidents wife. The singing honours were shared by Deepa Ramaswamy as "Eva", Sanjay Govil as 'Cke' and Oommen George as Col. Peron. The haunting melody of 'Don't cry for me Argentina' came up again and again in different ways and created the right atmosphere for the story. It was a two and a half ($2\frac{1}{2}$) hours musical delight with the pulse of the audience beating high. All concerned need to be congratulated on the high standard of the performance, excellent team work and hard work put into the show. 'Evita' is at present running on Broadway New York and in London. The students have had offers to have 'Evita' staged in Madras, Bangalore and also over the Madras T. V.

(C. M. C. News Weekly)

[*Shanthini Navaratnam is an Old Girl of Uduvil Girls' College and a member of the JDCSI Church, Manipay.*] — Ed.

## Wanted

Tamil-speaking Christian woman under 60 years with Ashram ideals of service and witness, as Admistrator, Christa Illam, Kalmunai. A married woman with a husband committed to such service would be very acceptable.

***Minimum qualifications:***

G. C. E. (O.L.) with English and book-keeping, and ability to preach and organize enagelistic teams.

Furnished bungalow available. Stipend negotiable.

***Please apply to:—***

Adminstrator, Christa Illam,
Kalmunai E. P.

*India*

## University Teachers' Training Conference

"The prophetic mission of the Church in India, has not been satisfactory because of its preoccupation with safeguarding its institutional interests. The SCM with its vigilant constituency of youth in various Church bodies should work towards the transformation of the Church.

The SCM should strive to draw the attention of academic communities to the social perspective of air educational enterprise".

These are some of the findings of the University Teachers' Training course conducted by the ECC together with the SCM in April this year.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

## தாரகை ஒளி

உள்ளத்தில் ஒளியுண்டாயின் வாக்கினிலே இனிமை யுண்டாகும் — பாரதி.

மலர் 142 ] 19 — 11 — 1982 [ இதழ் 47

# பிரஷ்னேவ் மறைந்தார்

சோவியத் பிரதமர் லியோனிட் பிரஷ்னேவ் தமது 75வது வயதில் மாரடைப்பினால் காலமானார். இவர் சோவியத் நாட்டின் பிரதமராகவும் கம்யூனிஸ்ட் கட்சி அரசியற் பீடத்தின் செயலாளராகவும் நீண்டகாலம் பணியாற்றியுள்ளார் கடந்த பதினெட்டு வருடங்களாக ரஷ்யாவின் தலைமைப்பீடத்தை அலங்கரித்தார். இவருடைய சடுதியான மரணம் ரஷ்யாவுக்கு மட்டுமன்றி உலகுக்கே பெரும் நஷ்டமாகும் என்பதை ரஷ்யாவின் எதிரிகள் கூட ஏற்றுக்கொள்வார்கள்

1917-ம் ஆண்டு ரஷ்யாவில் ஸார் மன்னனின் கொடுங்கோலாட்சியைக் கவிழ்த்துவிட்டு தொழிலாளர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டனா. ஆரம்ப காலத்திலிருந்தே ரஷ்யா பலவித பிரச்சனைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. உணவுப் பிரச்சினை, முதலாவது உலகப் போர் உள்நாட்டு எதிர்ப்பு எல்லாவற்றையும் சமாளித்து ரஷ்யா வளர்ந்து வந்தது. ஆனால் வெற்றி நடை போடுவதற்கு பெருந்தொகையான மக்கள் பலியிடப்பட்டனர். லெனின், ஸ்டலின், குருஷேவ் போன்ற இரும்பு மனிதர்கள் ரஷ்யாவின் தலைவிதியை நிர்ணயித்து வந்தார்கள். "இம் என்றால் சிறைவாசம் ஏன் என்றால் வனவாசம்" என்ற வாசகம் இவர்களுடைய ஆட்சிக்கே சாலப் பொருந்துவதாகும்.

1965இல் ரஷ்யாவின் தனிநாயகனாகிவிட்ட பிரஷ்னேவ் முந்திய கடுங்கோலர்களை விடப் பல வழிகளில் மாறுபட்டிருந்தார். கடும்பிடியும், சிரச்சேதமும் ஓரளவுக்கு நீங்கின. ஜனநாயகப் பண்பும் தாராளாண்மை வாதமும் ஓரளவுக்கு ரஷ்யாவில் வளர்ச்சிபெற்றன. சர்வதேச அரங்கில் பிரஷ்னேவ் பல கடூரமான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டாலும் சில நல்ல காரியங்களையும் செய்திருக்கின்றார். ரஷ்ய — இந்திய நட்பு நன்கு வளர்ச்சியடைந்தது இதன்காரணமாகவே பங்களாதேஷ் 1971இல சுதந்திரமடைய முடிந்தது. அணு ஆயுதப் பரிகரணப் பேச்சுவார்த்தையில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டிருக்கின்றது. பொதுவாக உலகெங்கணும், குறிப்பாக ரஷ்யாவெங்கணும் சமாதானம் நிலவி வந்தது. ஐம்பதாம் அறுபதாம் ஆண்டுகளில் நிலவிய அமெரிக்க — ரஷ்ய கெடுபிடி யுத்தம் பெருமளவில் மறைந்தது இத்தகைய சிறப்பு வாய்ந்த ரஷ்யப் பிரதமர் சடுதியாக மறைந்துவிட்டார். இதனையிட்டு நாம் மனம் வருந்தாமல் இருக்க முடியுமா?

---

## யாழ் விரைந்தனர்

வண, டொனல்ட் கனகரத்தினம் விசாரணைக்காக இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டவுடன் கொழும்பு அத்தியட்சர் மகாகனம் சுவீதன் பெர்னாண்டோ துரித நடவடிக்கைகளை மேற்கொண்டார், வண. செனத் பெர்னாண்டோ, வண. டியூலிப் சிக்கேரா, வண. விக்கிரமசூரியா ஆகியோர் உடனடியாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். வண. டொனல்ட் கனகரத்தினமும் நான்கு கத்தோலிக்க குருமாரும் அடுத்த நாளே விடுசெல்ல அனுமதிக்கப்பட்டனர்.

## கொழும்பு — தூத்துக்குடி கப்பற் சேவை

கொழும்பு — தூத்துக்குடி கப்பற் சேவை அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் ஆரம்பமாகும் எனத் தெரிகிறது; இக்கப்பலில் 600 பேர் பிரயாணம் செய்யலாமென அறிவப்படுகிறது.

அதேசமயம் தலைமன்னார் — இராமேஸ்வரம் கப்பற் சேவையும் விஸ்தரிக்கப்படவுள்ளது 830 பேரைக் கொண்டு சென்ற தலைமன்னார் — இராமேஸ்வரம் கப்பல் இனி 1300 பேரைக் கொண்டு செல்லத்தக்கதாக விஸ்தரிக்கப்படும் எனத் தெரிகிறது.

## புதிய நூலகர்

யாழ்ப்பாணக் கல்லூரியின் நூலகராக யாழ் மத்திய கல்லூரி அதிபர் திரு. W. இரத்தினசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அடுத்த வருட ஆரம்பத்தில் நூலகப் பொறுப்பை ஏற்பாரெனத் தெரிகிறது.

## யாழ். கல்லூரி மத்திய பிரிவின் பதில் தலைவர்

யாழ்ப்பாணக் கல்லூரி மத்திய பிரிவின் பதில் தலைவராக திரு. A. M. புறாடி அவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். செல்வி மேரி எவரஸ் அமெரிக்காவுக்கு சென்றிருப்பதனால் திரு, புறாடி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்,

## திருச்சபை ஒருமைப்பாடு பற்றிக் கருத்தரங்கு

இலங்கையில் திருச்சபை ஒருமைப்பாடு பற்றி ஒரு முழுநாட் கருத்தரங்கு சென்ற சனிக்கிழமை (13-10-82) யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெற்றது. பிலிமதலாவை இறையியற் கல்லூரி மாணவர்களினால் நடாத்தப்பட்ட இந்தக் கருத்தரங்கில் இலங்கையில் திருச்சபை ஒற்றுமைப்படுதலின் சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டன. வண. ஜோசப் சர்வானந்தன் (இலங்கைத் திருச்சபை) வண, ஜெயதிலகராசா (மெதடிஸ்த்) வண. S. மனோபவன் (தென் இந்திய திருச்சபை) ஆகியோர் தமது திருச்சபைகளின் நிலையை விளக்கினர். வண. S. N. சுகுணானந்தன் தொகுப்புரை வழங்கினார்,

## அடுத்த வருடம் மே மாதம் யாழ் நூல் நிலையம் திறக்கப்படும்

யாழ் பொதுசன நூலகத்திற்கு இதுவரை உள்நாட்டில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் இருபத்தேழு இலட்சம் ரூபா நிதியாகவும், முப்பத்தையாயிரம் புத்தகங்களாகவும், நூலக சாதனங்களாக சில அன்பளிப்புகளும் கிடைத்துள்ளன. எதிர்காலத்திலும் மேற்கொண்டு உதவிகள் கிடைக்கும் என்பதில் நம்பிக்கையுடையவர்களாகவுமுள்ளோம்.

ஆகவே, பெயரளவில் நரசிம்மராவின் மூலத் திட்டத்தின் மூன்றாவது கட்டமாகவும் அதன் திராவிட சிற்பவியல் பாங்குக்குப் பங்கமில்லாத வகையிலும், இன்றைய தொடர்பில் ஒரு பொதுசன நூல் நிலையத்தின் தொழிற்பாட்டுக்குப் பயன்படக் கூடியதாக புகழ்பெற்ற கட்டிடக் கலைஞர் வி. எஸ். துரைராஜா அவர்களால் மீளவடிவம் அமைக்கப்பட்ட புதிய கட்டிடத்திற்கு 1982 பெப்ரவரித் திங்கள் 7ஆம் நாளில் வைபவரீதியாக எம்மால் அடிக்கல் நாட்டப்பட்டது.

கட்டிட வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதோடு, ஏறத்தாழ ரூபா 3,017,632/-க்கான மதிப்பிடப்பட்ட செலவில் 1983 மே 9ஆம் நாளில் வேலைகள் பூர்த்தியடையுமென எதிர்நோக்கப்படுகிறது.

ஆயின் தற்போதைய கட்டிடத்தின் வடபகுதி ரூபா 2,93,296/-க்கான ஒரு மதிப்பிட்ட செலவில் (கட்டிடத்துக்கான திருத்தத்துக்கு ரூபா 1,18,446/- மீள மின்கம்பி தைத்தல் ரூபா 1,74,850/-) புதுப்பிக்கப்படவுள்ளது. இவ்வேலைகளுக்குப் புறம்பான கேள்விகள் கோரப்பட்டு, சித்திபெற்ற கேள்விக்காரர் ஏற்கெனவே வேலைகளை ஆரம்பித்துமுள்ளனர்.

வடபகுதிக்கான திருத்த வேலைகளும், மீள மின்கம்பி தைக்கும் வேலைகளும் பூர்த்தியானதும் விசேடமாகப் பட்டப் படிப்பு, மற்றும் பட்ட மேற்படிப்புப் படிக்கும் மாணவர்களது துன்பத்தைப் போக்கும் வகையில் உடனுதவு நூல் நிலையத்தை மறுபடி திறந்துவைக்க எண்ணியுள்ளோம். இடவசதி போதாமை காரணமாக தற்பொழுது தற்காலிகமாக நகர மண்டபத்தில் இடம் பெற்றிருக்கும் வாசிகசாலையும், சிறுவர் நூலகமும்கூட அங்கு தானே இடம்பெயரும்,

யாழ். பொதுசன நூல் நிலையத்தின் பொன்விழாவையொட்டியதாக அதன் திறப்புவிழா அமையும்படியாக நூலக மீள்விப்புத் திட்டம் பூராவையும் 1983ஆம் வருடத்திறகுள் பூர்த்தி செய்யலாமென எதிர்பார்க்கிறோம்.

எதிர்காலத்தில் யாழ் பொது நூலகத்திற்கு ஆதரவாக "நூலக தினம்" "நூலக வாரங்களை" ஒழுங்கு செய்யக் கருதும் வெளிநாடுகளிலுள்ள தமிழ் இயக்கங்களுக்கு கூடுதலான ஆதரவைப் பெறும் பொருட்டாக "மனித உரிமைகள் தினத்தை" (10-12-82) ஒட்டி அவற்றை ஒழுங்கு செய்யுமாறு யோசனை நல்கப்படுகிறது.

எமக்கு அறிவித்து யாழ்ப்பாணம் இலங்கை வங்கியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள "யாழ்ப்பாணம் பொதுசன நூல் நிலைய நம்பிக்கை நிதி" 2893ஆம் எண் கணக்குக்குத் தங்கள் உதவு தொகைகளை அனுப்பி வைப்பீர்களாகில் நன்றி பாராட்டுவோம். 05-03-1954ஆம் திகதிய 10649ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலின் பிரகாரம் இந்நிதிக்கான தங்கள் அன்பளிப்புகளுக்கு வருமானவரியிலிருந்து விலக்கப்பட்டுள்ளது. என யாழ் முதல்வர் தெரிவித்துள்ளார்.

## வேதாகம மொழிபெயர்புகள்

ஆசியாக் கண்டத்தின் பல நாடுகளிலும் தற்பொழுது றோமன் கத்தோலிக்கரும் புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவர்களும் சேர்ந்ததாய் அறுபதுக்கும் அதிகமான (இரு சபைகளுக்கும்) பொதுவான வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஐக்கிய வேதாகமச் சங்கங்களின் பசிபிக் பிராந்தியச் செயற்குழுக் கூட்டமொன்றில் இத் தகவல் வெளியிடப்பட்டது.

## பெண் குருமார்

வட இந்திய திருச்சபையின் நாலாவது சினட் மகாசபை எடுத்துக்கொண்ட தீர்மானதின்படி அபிஷேகம் செய்யப்பட்ட பெண் குருமார் அச்சபையில் ஊழியம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். நியூசிலன்து பிறிஸ்பித்திரியன் சபையைச் சேர்ந்த கனம் (செல்வி) டொறீன் நிடெல் அவர்கள் வட இந்திய திருச்சபையின் டில்லி ஆதீனத்தில் ஊழியம் செய்வதற்கான அதிகாரப் பத்திரம் அவர்களுக்குச் சமீபத்தில் வழங்கப்பட்டுள்ளது.

## கீழைத் தேச முறையில் வழிபாடு

அகில லோகத் திருச்சபைச் சங்கத்தின் மத்திய காரியக் குழு சமீபத்தில் ஜெனீவாவில் உள்ள சபை ஒன்றிணைப்பு நிலையத்தில் ஒரு வழிபாட்டிற் கூடியது. உலகின் பல பாகங்களிலும் இருந்து வந்த இக்குழு அங்கத்தினர் ஆலயத்தை வந்தடைந்ததும் இந்திய முறையில் "நமஸ்தே" எனக் கூறி, மலர் கொடுத்து வரவேற்கப்பட்டனர். இந்திய, சீன இராகங்களுடன் பக்திப் பாடல்கள் பாடப்பட்டன. வேதப் பகுதிகளும் செப மாலைகள் கொரியன், பிரெஞ்சு. ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உபயோகிக்கப்பட்டன. இந்த வழிபாட்டாராதனை முறை அரசரடி இறையியற் கல்லூரியில் பல காலம் அதிபராயிருந்த கலாநிதி கனம் சாமுவேல் அமிர்தம் அவர்களின் தலைமையிலான. பல கீழைத் தேச நாடுகளைச் சேர்ந்தவர்களாலான ஒரு குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டது. மேலைத் தேசக் கிறிஸ்த சபைகள் கீழைத் தேச வழிபாட்டு முறைகளில் நலமானவற்றையும் அங்கீகரிப்பதோடு தமது வழிபாட்டுமுறைகளிற் சேர்த்துக்கொள்ளவும் முன் வர வேண்டுமெனப் பலரும் வற்புறுத்தி வந்தமையும் இதுபற்றி அகிலலோகத் திருச்சபைக்குச் சிபாரிசுகள் செய்யப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## போராயுத உற்பத்திக்கு எதிர்ப்பு

அமெரிக்காவில் போராயுதங்களை உற்பத்தி செய்யும் ஒன்பது ஆயுத உற்பத்திக் கம்பனிகளுக்கு எதிராக. ஆலயங்களில் முதலீட்டுப் பங்குள்ள எழுபது சமய சம்பந்தமான நிறுவனங்கள், நடவடிக்கை எடுத்துள்ளன. இத்தளவு பெருந்தொகையான நிறுவனங்கள், பிரதானமாக அணு சார்ந்த போராயுதங்களின் உற்பத்திக்கும் விநியோகத்திற்கும் எதிர்ப்புக் காட்டியது இதுவே முதற் தடவையாகும் என நம்பப்படுகிறது.

இஃதிவ்வாறாக, வளர்முக நாடுகளுக்குப் போராயுதங்களை வழங்கும் தொழிலில் 1978 — 1980 ஆண்டுகளில் ரஷ்யா வகித்திருந்த முதலிடத்தை வெகு விரைவில் அமெரிக்கா எடுத்துக் கொள்ளும் எனச் சுட்டிக் காட்டப்படுகிறது!

# சாவும் ஒரு வாழ்வு

## கனம் A. C. தம்பிராசாவுக்கு அஞ்சலி

— நா. சுப்பிரமணியம், சாவகச்சேரி. —

யாழ். மாவட்டத்திலேயே சிறப்பாயமைந்த, புனர் வாழ்வுத் திட்ட வேலைகள் நடைபெறும் இடமே பரந்தனில் நிறுவப்பட்டிருக்கும் "நவஜீவனம்". இலங்கை மாத்திரமன்றி உலகே அறிந்த ஒரு நிறுவனம் இதுவாகும்.

இதன் தாபகர்தான் 1-11-82இல் சாவைத் தழுவி வாழ்வுக்குள் புகுந்த அருள்திரு. A. C. தம்பிராசா (தம்பி) அவர்கள் நவஜீவனத்தில் இவரது நினைவில் எழுந்த சுலோகங்கள் பலவற்றைக் காணலாம், அவர் இறுதியாய்க் கூறித் திரிந்ததும் அவரது பிரேதப் பெட்டியை அலங்கரித்த சோடியில் காணப்பட்டதுமான சுலோகந்தான் "சாவும் ஒரு வாழ்வு" இது சுதந்திரன் ஆசிரியரின் கற்பனையில் பிறந்தது, கருத்து மிக்கது.

1-11-82-ல் நித்திய வாழ்வுக்குள் சென்ற அருள்திரு. தம்பிராசா அவர்கள் 12-12-1911-இல் அச்சுவேலியில் கிறிஸ்தவ நம்பிக்கையில் திளைத்த ஒரு ஆசிரிய குடும்பத்துக்கு மகனாகப் பிறந்தார். கிறிஸ்தவ நெறியில் வளர்ந்து யாழ். மத்திய கல்லூரியில் மற்றிக்குலேஷன் வகுப்பில் தேறி சிறப்பூர் இறையியற் கல்லூரியில் கற்றுத் தேறினார். பெற்றோர் எண்ணப்படி தாமே முன்வந்து படிக்கச் சென்றவர்; (நேர்முகத் தேர்வு செய்தனுப்பப்படாதவர்) 1936-ல் இறையியற் கல்வியை முடித்துக்கொண்டு வந்து தெ. இ. சபையாருயிருந்த காரணத்தால் தெ. இ. சபையின் (அப்போது சபா சங்கம்) ஊழியப் பொறுப்பேற்று உசன், வட்டுக்கோட்டை, அராலி, சாவகச்சேரி, உடுவில் ஆகிய சபைகளில் ஊழியம் புரிந்தனர்.

1937-இல் சாவகச்சேரியில் ஒரு நல்ல தேவ ஊழியனின் மகளை மணந்தார். அவரது மனைவியின் ஊழிய அனுபவமும் ஒத்துழைப்பும் போதகரின் ஊழியத்தில் பேருதவி புரிந்தன. அவர் வளர உதவியாயிற்று.

சபை ஊழியனாய் இருந்த காலத்தில் சபை ஊழியம் வெறும் போதனையாக மாத்திரம் இருத்தல் போதாது, மக்களோடு வாழ்ந்து, அவர் தேவைகளில் கலந்து அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் மூலம் அவர்கள் மத்தியில் சாட்சிகளாயிருப்பதால் பயனுண்டென்றெண்ணியவர். அவருக்கு மெதடிஸ்த மிஷனரியான செல்வ எலிசபெத் பேக்கரும் (விடிவெள்ளி, அருள்திரு. J. J. இரத்தினராசா, திரு. ஆனந்தநாயகம் போன்றவர்களும்) பக்கபலமாயிருந்து 1959-ல் நவஜீவனம் உருவானது.

தொடக்கத்தில் போதகர் அடைந்த தொல்லைகள் அனந்தம். வனவிலங்குகளுக்கு மத்தியில் பரந்தன் காட்டில் காலங்கழிக்க நேர்ந்தது. இப்போதுள்ள இடம் வாங்கப்பட்டபின் கஷ்டங்கள் தொல்லைகள் பல கடந்து இன்றைய நிலையடைய வழி நடத்தினார்.

போதகர் எந்த நிலையிலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டவர். வறுமை, வருத்தம், விரோதம் அவரை எதுவும் செய்ய முடியாது. வருத்தம்பற்றி, குறை பற்றி பேசார். பலனை எதிர்பாராது கடவுளோடு சேர்ந்து பணி புரிவார். நல்லதை நினைப்பது, பேசுவது, செய்வதில் மகிழ்ச்சி கண்டவர். எப்போதும் சந்தோஷமாயிருக்கவும் சந்தோஷப்படுத்தவும் கற்றுக் கொண்டவர். (பவுல் அடிகள் போல.)

இன்று நவஜீவனம் பிள்ளைகள் பெரியவர்களாய் 300 பேர் வரையில் புனர்வாழ்வு பெறும் இடமாக வளர வழி கண்ட பெருமை தம்பிராசாப் போதகருடையது;

சிரித்துப் பேசி, சிரித்து வாழ்ந்து சிரித்து மறைந்தார். ஆண்டவர் சமூகத்திலும் சிரித்த முகத்துடன் காணப்படுவார் என நம்பலாம்.

நவஜீவனம் நட்டமடைந்தது எனச் சொல்வோம். இழப்பு என உணர்வோம். அல்ல அல்ல. அவரது இலட்சியம் வேர்விட்டு வளருகிறது. வாழும். அவர் செத்தாலும் அவர் இலட்சியம் இங்கு வாழ்கிறது. அவரும் ஆண்டவன் சமூகத்தில் வாழுகிறார். அவரை நேசிப்போர்க்கு இவ்வாக்கு எவ்வளவு ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறது. அவர் மறைந்தும் நம் மத்தியில் வாழ்வார் என்பதற்கு அவரது இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட சனத் திரளும் சிந்திய கண்ணீர்க் கடலும் சாட்சிகளாகும்.

வாழ்க இயேசு நாமம் வளர்க தம்பி எண்ணங்கள்.

## பர்மாவில் நற் செய்திப் பணி

பர்மாவில் உள்ள 'கச்சின்' (சாதி) கிறிஸ்தவர்கள் தமது நற் செய்திப் பணி பற்றிய ஆர்வத்தை ஒரு புது முறையிற் கண்டு கொண்டனர். இவர்கள் மத்தியில் கிறிஸ்த சபை தாபிக்கப்பட்ட ஒரு நூற்றாண்டு கடந்து போய் விட்டது. எனினும் தமது அயலாராக வாழும் கச்சின் மலைப் பிரதேச வாசிகளுக்கு நற் செய்தியைக் கூறி அறிவிக்க வேண்டிய உத்தரவாதத்தை அவர்கள் அந்தளவு காத்திரமாய் இத்தளவும் எடுக்கவில்லை. இப்பொழுதோ அதைப் பற்றிய புது உணர்ச்சியும் ஊக்கமும் கொண்டவர்களாய்த் தீவிர முயற்சியில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். "மூன்று வருடங்களுக்கு முந்நூறு பேர்" எனப் பெயரிடப்பட்டுள்ள ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளனர். இதன்படி மூன்று வருடகாலங்களுக்கு மாத்திரம் இந்த மலைப் பிரதேச வாசிகளிடம் சென்று நற் செய்திப் பணி புரிய முந்நூறு தொண்டர்கள் அழைக்கப்பட்டனர். முதலாவது தொண்டர் படை சமீபத்தில தனது வேலையை முடித்தது.

கச்சின் மலைப் பிரதேசத்தில் கிறிஸ்தவ நற் செய்தி ஊழியம் புரிவது இலேசான காரியமல்ல, பல பக்கங்களிலும் வெளிப்படையான எதிர்ப்புக்களும் தாக்குதல்களும் உண்டாயின. வேறு பலர் சாதகமாய் இருந்தாலும் உண்மையாய்க் கிறிஸ்துவை ஏற்கொண்டோர் ஒரு சிலரே. இதைவிட மலேரியாக் காச்சலும் தொண்டர் படையைத் தாக்கினது. இரண்டு இளம் பெண்கள் மலேரியாக் காச்சலினால் உயிரிழந்தனர். எனினும் இப் பணியிற் பலனுண்டு என்பதே அவர்கள் திட்டமாய்க் கண்ட அனுபவம். ஆதலால் அநேகம் தொண்டர் நற் செய்திப் பணியைத் தமது முழு நேர வேலையாகவே ஏற்றுக் கொண்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

# நமது சபைகள்

[அச்சுவேலிச் சபைத் தொடக்கமும் பின்னர் நிகழ்ந்த சில சம்பவங்களும் அச் சபையின் 90ஆம் ஆண்டுப் பூர்த்தியை யொட்டித் திரட்டப்பட்டவை. ஆக்கம் போ. யோ தம்பிரத்தினம்.]

1854-ம் ஆண்டு தொடக்கம் அச்சுவேலியில் கிறிஸ்தவப் பணி செய்யப்பட்டதாக அறியக் கிடக்கிறது. ஆனாலும் அக்காலத்தைப் பற்றிய குறிப்புகள் ஏதும் கிடைக்கவில்லை. சபை ஸ்தாபிக்கப்படவும் இல்லை. அச்சுவேலியிலும் தொண்டைமாநாற்றிலும் இருந்த கிறிஸ்தவர்கள் உடுப்பிட்டிச் சபையின் புத்தகங்களிற் பதியப்பட்டு அச்சபையின் அங்கத்தவர்களாக கருதப்பட்டனர்.

1867-ம் ஆண்டில் Joseph Manickam Sanders என்னும் ஊழியர் அச்சுவேலிக்கு அனுப்பப்பட்டார். அவர் அச்சுவேலியில் பணி புரிந்தாலும் அவரும் அவரது குடும்பத்தினரும் உடுப்பிட்டிச் சபையின் அங்கத்தினராகவே கருதப்பட்டு வந்தனர். அவர் அச்சுவேலியில் ஒரு கிறிஸ்தவ கோயிலும் குரு மனையும் கட்டுவிக்க முற்பட்டபோது, அவ்வூர் மக்களிடமிருந்து பலத்த எதிர்ப்பு இருந்ததாக அறியக் கிடக்கிறது. அந்தச் சந்தர்ப்பத்தில் அவருடைய ஊழியத்திற்குச் சாதகமாக ஒரு நிகழ்ச்சி நடந்தது. அக்காலத்தில் கணபதியார் என்று அழைக்கப்பட்ட செல்வாக்குடைய ஒரு சைவப் பிரமுகர் இருந்தார். அவர் ஊர் மக்களின் முறைப்பாடுகளைக் கேள்வியுற்று, மேற்படி போதகரை வரவழைத்து அவரது நோக்கங்கள் திட்டங்கள் பற்றி விசாரித்தார். விசாரித்து அறிந்ததன் பயனாக Sanders என்பவருக்கு ஆதரவையும் ஒத்தாசையையும் அளிக்க முன்வந்தார். அக்காலம் தொட்டு இவ்விருவரது குடும்பத்தினரும் நண்பர்களாக இருந்து வந்தது மாத்திரமன்றி, கணபதியாரின் பிள்ளைகளிற் சிலர் பிற்காலத்தில் கிறிஸ்தமதத்தை ஏற்று அச்சுவேலிச் சபையின் அங்கத்தினராகவும் இருந்தனர்.

இன்னுமொரு சிறந்த நட்பும் Sanders போதகருக்குக் கிடைத்தது. அக்காலத்தில் மிகுந்த செல்வாக்குடைய பெரிய கத்தோலிக்க சமூகம் அச்சுவேலியில் இருந்தது. அவர்களுள் முதல்வராக விளங்கியவர் தம்பிமுத்துப் புலவராவர். இவர் ஒரு செல்வந்தரும் கல்விமானும் பத்திராதிபருமாயிருந்தார். ஓர் அச்சகம் வைத்திருந்து இரு மொழிகளில் ஒரு பத்திரிகை வெளியிட்டு வந்தார். ஆங்கிலத்தில் Trubune என்றும் தமிழில் சன்மார்க்க போதினி என்றும் இப்பத்திரிகை அழைக்கப்பட்டு வந்தது. (இப்புலவரது வளர்ப்புப் புத்திரன் தான் பிரசித்திபெற்ற கல்விமானாகிய சுவாமி ஞானப்பிரகாசர்.) பத்திரிகை வெளியீட்டில் தம்பிமுத்துப் புலவருக்கு Sanders போதகர் உதவியாய் இருந்தார் என்று சொல்லப்படுகிறது. எப்படியாயிருந்தாலும் இவ்விருவருக்குமிடையே நெருங்கிய நட்பு ஏற்பட்டு அது Sanders போதகரது வாழ்க்கைக்கு உதவியையும், வேலைக்கு ஊக்கத்தையும் அளித்தது.

1888-ம் ஆண்டு மட்டில் அச்சுவேலி ஆலயத்தின் கட்டிட வேலை ஆரம்பமாகி 1891-ம் ஆண்டு மட்டில் முடிவுற்றதாக அறியக் கிடக்கிறது. குரு மனையும் அக்காலத்திலேயே கட்டப்பட்டிருக்கலாம் போலத் தெரிகிறது. 1891-ம் ஆண்டுக் கடைசிப் பகுதியில் அச்சுவேலியிலும் தொண்டைமாநாற்றிலும் இருந்த கிறிஸ்தவர்கள் உடுப்பிட்டிச் சபையிலிருந்து பிரிந்து ஒரு தனிச் சபையாக இயங்க விரும்புவதாகவும், J. H. Sanders ஐத் தங்களுக்குப் போதகராக நியமிக்கும்படியும் கோரிக்கை விடுத்தனர். அக் கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டு, 1892-ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் அச்சுவேலி ஒரு தனிச் சபையாக இயங்க ஆரம்பித்தது. அப்போது இருந்த அங்கத்தவர் தொகை 24. J. M. Sanders அச் சபைக்கு ஊழியனாக நியமிக்கப்பட்டார்; அதே வருஷம் வைகாசி மாதம் அவருக்குக் குரு அபிஷேகம் கொடுக்கப்பட்டது. இதுவே அச்சுவேலி ஆலயத்தில் நடந்த முதல் விசேஷ நிகழ்ச்சியாகும். அக்காலத்தில் உதவி ஊழியர்களாக மட்டுவிலைச் சேர்ந்த N. V. Joseph என்பவர் அச்சுவேலியிலும் அச்சுவேலியைச் சேர்ந்த William Vythilingam என்பவர் தொண்டைமாநாற்றிலும் கடமையாற்றினர். இவர்கள் உபதேசிமார் என்று அழைக்கப்பட்டு வந்தனர்.

சபை நிறுவப்பட்டதும் கல்வித்துறையில் கவனம் செலுத்தப்பட்டது, தொண்டைமாநாறு, இடைக்காடு, கதிரிப்பாய், நவக்கிரி முதலிய இடங்களில் தமிழ்ப் பள்ளிக்கூடங்களும், அச்சுவேலியில் ஆங்கிலப் பள்ளிக்கூடமும் நிறுவப்பட்டன. தம்பிமுத்துப் புலவரின் ஏவுதலால்தான் அச்சுவேலியில் ஆங்கிலப் பாடசாலை நிறுவப்பட்டது என்று சொல்லப்படுகிறது.

(தொடரும்)

## ஆலயம் தொழுவது சாலவும் நன்று

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது முதுமொழி. ஒரு புதிய கருத்து - ன் இது இப்பொழுது நிருபிக்கப்படுகிறது வடகரலைனா சர்வகலாசாலையின் பேராசிரியர், கலாநிதி பேற்றன் கப்ளான் என்பவர் ஆலயம் போய்த் தொழுவது ஆத்ம சுகத்திற்கு மாத்திரமல்லாமல் சரீர சுகத்திற்கும் மிகவும் உதவியான ஒரு காரியமெனக் கூறுகிறார். வாரத்தில் ஒரு முறையாவது ஆலயத்துக்குப் போவோருடன், அதற்கும் குறைவாக, இடையிடையே மாத்திரம், போகும் பலரை ஒப்பிட்டு ஆராய்ச்சி நடத்திய பின் "பக்தி சுகத்திற்கு நல்லது" என்ற முடிவுக்கு அவர் வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

வழமையாக ஆலயம் போய்த் தொழுவோருக்குக் குருதி அமுக்க அளவு செவ்வையாயிருப்பதாகவும், ஆலய வணக்கத்திற் கரிசனையற்றிருப்பவர் அளவு கடந்த குருதி யமுக்கத்தினால் ஏற்படும் பல கோளாறுகளைக் கண்டுள்ளதாகவும் அவர் செய்த ஆராய்ச்சியின் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது. 400 பேரை அடிப்படையாய்க் கொண்ட இந்த ஆராய்ச்சியின் முடிவு ஆலய வணக்கத்தை அலட்சியம் செய்வோரைச் சிந்திக்க வைக்க வேண்டியவொன்று.

ஆதாரம்: திருச்சபைத் தூது - சஞ்சிகை

*EDITORIAL*

## The Sealing on the 'Humanities'

The number of 'Arts' students entering the Universities in Sri Lanka will be restricted in future to some 2150, according to a decision, reported to have been made, by the University Grants Commission.

Although there is likely ro be an increaee next year in almost all the faculties, the increase in the Arts faculty, it is learnt, will not be significant.

Over-specialisation in our Universities in recent years has created a situation which has affected the 'Arts' graduates more than any other group as the subjects for their degree (as Hindu Civilisation, Tamil, History etc., etc.) are subjects which do not require any basic knowledge of English and therefore have no "salability" in a job market largely dominated by foreign entrepreneurs.

Schools too are cutting down on their 'Arts' courses as pupils come up higher. Every parent wants his child to do "science" with the consequence that the 'arts' classes in many schools become often a dumping ground for the less mentally alert.

This is unfortunately the position today in many of our schools and this is a really challenging situation.

The *White Paper* on Education, released by the government at the beginning of the year, did contain some specific proposals by which education in the country, even in the liberal arts, could be made more meaningful in the context of development, by making the study of English mandatory at certain levels, particularly to students who wish to pursue higher education.

But 'Education' and "politics' in this countty have been strange bedfellows. Unfortunately, the forces mobilised against the *White Paper* were too formidable for the government to take any bold step towards implementation.

While 'education' continues to be riddled with 'politics' in this country, the victims are, ironically, the very people whom the politicians are trying to protect, namely the children of the middle and lower middle classes. For, it is they whose fortunes are tied up with the educational horizons they could see in their own country — Sri Lanka.

Elsewhere in this issue we have published an extract from the Prize Day address at one of our leading educational institutions by a Senior Lecturer in one of our Universities, deploring the absence of "versatility" among our student population today — a trait which was a characteristic hall mark of some of the best products of our schools, some decades ago.

The writer is aware of a time in the early forties, when some of the 'Arts' graduates who passed out of the University College (with English, Latin and History as the subjects for their degree) had, during their University career, set up new records in Athletics an achievement which entailed systematic and gruelling practice almost every day on the Sports field under the close supervision and instruction of a coach. In between their academic pursuits and Sports regimen, they also participated we know in some amateur swimming contests.

We are reminded at this juncture of what we learnt in our school days about the civilisation of the ancient Greeks.

The hero of the *Odyssey* "was a great fighter and a ready speaker; he can build and sail a boat; drive a furrow straight; challenge his opponent at throwing a discuss; flay skin and cook an ox and be moved to tears by a song". He had surprising "arete".

Many of our problems in Sri Lanka today stem from an educational system in the country which gives little opportunity for the students to develop any kind of 'arete' even if they have the potentiality.

For, the school student of Sri Lanka today rushes from the school gate in the evening only to enter the gate of his 'tutory'.

It is good for our students and their parents to remember the advice which *William Christopher Handy*, the Patriarch of American song writers gave to the generation of his day:—

"Life is a lot like playing the trumpet you got to blow something into it to get something out of it."

## The International Stadium in Jaffna

At a Cenference held at the Jaffna District Secretariat recently, the plan to build the International Sports Stadium at *Kakaithivu* (காக்கை தீவு), three miles from Jaffna on the Vaddukoddai road was approved with certain modification.

Preliminary work on the construction is to begin in January 1983. A sum of 5 million rupees has been set apart for earth filling and construction of boundary walls.

This site was selected, among others inspected, by a Committee comprising Mr. Gamini Dissanayake, Minister of Land, Land Development and Mahaveli Development Mr. S. Nadarajah, Chairman DDC, Jaffna, and Mr. A. Navaratnam, former DIG.

At this Conference, it was decided to acquire another four acres at the site, subject to the approval of the Ministry of Lands.

*The goal of Education*

## The Training of Versatile Youth

A Secondary school like Jaffna College has an important role to play in the imparting of an all rouud education. Your students come to you Sir, at the tender age of five. They would be young men and women of eighteen or nineteen years of age when they leave the portals of your school to go to university, technical school or some other place of further training. They spend the most impressionable years of their life in the secondary school. And the awesome and I think, the rewarding responsibility of moulding these young minds, awakening their interests and imbuing them with worthy ideals belongs to the school. It is said that "the versatile man, the one who toushes life at many points" is the one who lives zestfully. The ideal of the versatile man is important today for very cogent reasons. In these days of increasing specialization, few adults are interested in anything beyond narrow field of specialization. It is surmised that human beings are fast becoming akin to insects, the characteristics of insects being uniformity of activity and specialization of function. In as much as the modern adult narrows his field of interest and engages in continous repetition of the same operations as in the case of the factory worker or the machine minder, he loses his variability and adaptability. So, in this age of science and technology, there is a crying need for the versatile man, the one who because of his varied intellectual and other pursuits, can ward off the cramping effects of extreme specialization. Jaffna College has long had a tradition of an all-round education. Students of Jaffna College have gone out into the world to take their place as useful citizens, interested and involved in the life around them. It is a matter of great satisfaction to hear from your report Sir, that Jaffna College is continuing this rewarding task of training versatile young men and women.

Science and more science has become the order of the day. Science has wrested the place long held by the humanities. Pardon me Sir, if I as a student and lover of the humanities take this opportunity to make a plea for humanities. It is gratifying to note from your report last year, that more and more students are taking to the study of the humanities, I would urge that the humanities be taught not merely as an alternative discipline with science, but as something necessary, complementary to a scientific training. I do not for a moment decry the usefulness of science. Science has given us a mastery over nature and to that extent has made our lives comfortable and free from drudgery. But "Science is ethically neutral." It is good if used for the good of mankind and evil if used for the destruction of life. The Humanities, on the other hand, tell us what is good, and beautiful and true and what ends ought to be pursued. A liberal education in the present context, therefore, is not an education which pursues one to the exclusion of the other. It would rather be an education that keeps informed of the advances in the field of science while seekiug spiritual food and solace in the great works of literature, philosophy, history, music and art.

[Extracts from the Prize Day Address of Dr. (Mrs.) M. Arulchelvam at the Jaffna College Prize Giving, 1982.]

St. John's College

## AL Students' Association

"The present vogue among students pursuing higher education in schools, to opt for University courses which carry with them a social status rather than opt for courses for which the students are better fitted is much to be regretted" said Professor N. Sritharan, Prfessor of Medicine of the Medical Faculty of the University of Jaffna, proposing the Toast of the College at the Annual AL Association Dinner held recently in the College Hall. Inpaselvan Vidyananthan presided.

"While it is necessary" said Dr. Sritharan "that one must endeavour to make a decent living for himself, this objective should not be an all consuming pursuit to the neglect of our use to the society to which we belong. There should be a limit to personal aggrandisement."

Mr. C. E. Anandarajan, Principal of the College replied to the Toast.

Other speakers on the occasion were Mr. S. Ambihaipahan, Atorney-at.law who proposed the Toast of the AL Association, S. Vignapalan who proposed the Toast of the Sister Associations and Miss P. Jeyaratnam of Chunduculi Girls College who replied to the Toast of the Sister Associations.

## Christian Women in the News

*Marianne Katappo* (39), an Indonesian Christian Theologian has won the 1982 South East Asia Writers' Award for Indonesia. She won the award primarily for her book "Raumanen" (1977) which deals with the inner conflict of a young girl facing an increasingly alienated environment.

* * *

*Sister Elizabeth Paul*, a deacon of the Madras Diocese of the CSI, is going to Melbourne for three years to complete her master's degree with the Melbourne College of Divinity. She will spend the first year also ministering in a parish.

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. QB./59/300/26/82.*

Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 19th November 1982 and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna.